# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:24** **தேதி: 20.07.2010.**

## அக்டோபரில் 3 நாள் வேலை நிறுத்தம்.. புது டெல்லி கருத்தரங்கம் முடிவு

BSNLஐ பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடு உருவாக்கப்பட்ட கூட்டு நடவடிக்கைக் குழுவின் அகில இந்திய கருத்தரங்கம் புது டெல்லி மாவலங்கர் ஹாலில் ஜூலை 19 ஆம் தேதி நடைபெற்றது. நமது தமிழ் மாநிலத்தில் இருந்து மாநில உதவி செயலர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், CGM(O) மாவட்ட செயலர் தோழர் KV.சிவகுமரன், நீலகிரி மாவட்ட உதவி செயலர் தோழர் R.சுரேந்திரன், நீலகிரி மாவட்ட பொருளாளர் தோழர் V.முரளி கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

நிரம்பி வழிந்த மாவலங்கர் ஹாலில் நடைபெற்ற கருத்தரங்கத்தினை கூட்டு நடவடிக்கைக் குழுவின் தலைவர் தோழர் NTசஜ்வானி தலைமை தாங்கினார். JAC அமைப்பாளர் தோழர் VAN நம்பூதிரி வந்திருந்த அனைவரையும் வரவேற்றதுடன், கூட்டு நடவடிக்கைக் குழுவின் அறிவிப்பையும் வெளியிட்டு விளக்கி பேசினார். 7 கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை அரசாங்கம் உடனடியாக தலையிட்டு தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில், நமது எதிர்ப்பை தெரிவிக்கும் விதமாக 2010, அக்டோபர் 19 முதல் 21 வரை மூன்று நாட்கள் வெளியிருப்பு வேலை நிறுத்தம் நடத்த வேண்டும் என்ற ஆலோசனையை முன் மொழிந்தார்.

CPI(M) கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் தோழர் பாசுதேவ் ஆச்சார்யா நமது கருத்தரங்கத்தை துவக்கி வைத்தார். அவர் தனது துவக்க உரையில் மத்திய அரசாங்கத்தின் தவறான கொள்கைகளை விளக்கி பேசினார். அதனை எதிர்த்து மத்திய தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்று கூடி செப்டம்பர் 7ஆம் தேதி நடத்த உள்ள வேலை நிறுத்தத்தையும் சுட்டிக்காட்டி, BSNLல் நமது போராட்டம் மிக மிக அவசியமான ஒன்று என்பதனை வலியுறுத்தி பேசினார்.

கருத்தரங்கில் BSNLEU பொது செயலர் தோழர் P.அபிமன்யூ, SNEA பொதுச் செயலர் தோழர் GL.ஜோகி, AIBSNLEA பொது செயலர் தோழர் பிரகலாத் ராய், NFTE (BSNL) பொதுசெய்லர் தோழர் CC.சிங், NUBSNL(FNTO) பொது செயலர் தோழர் வள்ளி நாயகம், BSNL MS பொது செயலர் தோழர் V.சுரேஷ் குமார், TEPU பொது செயலர் தோழர் V.சுப்புராமன், BSNL WRU வின் தோழர் ஸ்ரீவத்சவா, BTU BSNL பொதுசெயலர் தோழர்.ஹரிசிங், SEWA BSNL அகில இந்திய பொருளாளர் தோழர் ND. ராம், AIBCTES பொது செயலர் தோழர் DB.பட்வா, மற்றும் ATM BSNL பொது செயலர் தோழர்.யாதவ் ஆகியோர் உரையாற்றினர். BSNLல் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களின் பொது செயலர்களும் உரையாற்றும் சமயத்தில் தோழர் VAN நம்பூதிரி முன்மொழிந்த அந்த தீர்மானத்தை உணர்வுபூர்வமாக வழி மொழிந்தனர். அது மட்டுமல்லாது அக்டோபர் 19 முதல் 21 வரை நடைபெற உள்ள மூன்று நாள் வேலை நிறுத்தத்தை முழுமையாக வெற்றி பெற செய்ய வேண்டும் என அறைகூவல் விடுத்தனர். NFTEயின் முன்னாள் பொதுச் செயலர் தோழர் OP.குப்தாவும் இந்த கருத்தரங்கில் கலந்துக் கொண்டார்.

நமது கருத்தரங்கத்தில் CITUவின் துணைத் தலைவர் தோழர்.MK.பாந்தே, AITUC தலைவர் தோழர்.GL.தர், INTUC அகில இந்திய தலைவர் தோழர் சஞ்சீவ ரெட்டி ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். அனைவரும் அரசாங்கத்தின் தவறான கொள்கைகளால் இந்திய நாட்டு உழைக்கும் வர்க்கம் எவ்வாறு எல்லாம் பாதிக்கப் படுகிறது என்பதனை விளக்கினார்கள். அது மட்டுமல்ல பொதுத் துறைகளை பாதுகாக்க வேண்டும் என்ற கோஷத்தையும் உள்ளடக்கி செப்டம்பர் 7ஆம் தேதி நடைபெற உள்ள அகில இந்திய வேலை நிறுத்தத்திற்கு நமது பங்கேற்பையும் கேட்டுக் கொண்டதோடு நமது வேலை நிறுத்தத்திற்கு மத்திய தொழிற்சங்கங்களின் ஆதரவையும் முழுமையாக தெரிவித்தனர். மேலும் புது டெல்லி விஞ்ஞான கழகத்தை சேர்ந்தவரும் மிகச் சிறந்த அறிஞருமான தோழர்.பிரபீர் புர்க்யாஸ்தா நமது வேலை நிறுத்தம் நமக்காக நடைபெற உள்ள வேலை நிறுத்தம் என பார்க்கக் கூடாது எனவும், தேசத்தின் சொத்தான BSNL எனும் மிக பெரிய பொதுத் துறை நிறுவனத்தை காப்பாற்றுவதன் மூலம் இந்திய நாட்டு மக்களின் சொத்தை காப்பாற்றுவதற்கான போராட்டம் எனவும் தெரிவித்தார்.

இறுதியாக தோழர் VAN நம்பூதிரி முன்மொழிந்த அந்த தீர்மானம் கலந்துக் கொண்ட அனைத்து உறுப்பினர்களின் பலமான கரவொலியுடன் ஏக மனதாக நிறைவேற்றப் பட்டது. கருத்தரங்கம் வெற்றி கரமாக நிறைவுற்றது.

இந்த அகில இந்திய கருத்தரங்கம் வேலை நிறுத்தம் உள்ளிட்ட மிக முக்கியமான முடிவுகளை எடுத்துள்ளது. BSNLஇன் தற்போதைய நிலைமையினையும் (குறிப்பாக BSNLஇன் விஸ்தரிப்பிற்கு அரசு விதித்த தடைகளையும், மற்ற தனியார் நிறுவனங்களை விட மிக மிக அதிகாம BSNL நிறுவன்த்திடமிருந்து ஸ்பெக்ட்ரம் கட்டணமாக 18,500 கோடி ரூபாய்களை பெற்றது) BSNL நிறுவனத்தை நலிவடையச் செய்துவிட்டால் தனியார் நிறுவனங்கள் தங்களுக்குள் cartel அமைத்து தற்போது மிகவும் குறைவாக இருக்கும் தொலைத் தொடர்பு கட்டணங்களை உயர்த்திவிடுவார்கள் என்ற ஆபத்தையும் ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பணி நம்மிடையே உள்ளது. அந்த பிரச்சாரத்தை தல மட்டங்களில் கூட்டு நடவடிக்கைக் குழுக்களை உருவாக்கி கொண்டு செல்ல வேண்டும். BSNL நிறுவனத்தை நலிவடையச் செய்ய மத்திய அரசாங்கமும் BSNL நிர்வாகமும் எடுத்து வரும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி BSNLஐ பாதுகாக்க நடைபெற உள்ள மூன்று நாள் வேலை நிறுத்தத்தை வெற்றி கரமாக்க வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள.

**S. செல்லப்பா.**
**மாநில செயலர்.**

# ஜூலை 19ல் நடைபெற்ற BSNL ஊழியர்களின் தேசீய கருத்தரங்கின் தீர்மானம்.

2000ஆம் ஆண்டில் தொலைத் தொடர்பு இலாகாவை கார்ப்பரேஷனாக மாற்றியதின் அடிப்படையில் BSNLல் இணைந்தமூன்று லட்சத்திற்கும் அதிகமான ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளைக் கொண்டுள்ள கூட்டு நடவடிக்கைக் குழுவினால் நடத்தப்பட்ட தேசீயக் கருத்தரங்கம், BSNLன் தங்கு தடையற்ற வளர்ச்சியினை வளர்தெடுப்பதற்கும், ஊழியர்களின் சட்டபூர்வமான நலன்கள் பாதுகாப்பதற்கும் கொடுத்த வாக்குறுதிகளிலை ஏமாற்றிய மத்திய அரசாங்கத்தை மிக வன்மையாக கண்டிக்கிறது. அது மட்டுமல்லாமல், BSNLஐ தனியார் மயப் படுத்துவதற்காக இந்த நிறுவன்த்தை சீர்குலைப்பதற்காக அரசு அமுலாக்கி வரும் திட்டமிட்ட கொள்கைகளையும் இந்த கருத்தரங்கம் கண்டிக்கிறது. BSNLன் வளர்ச்சிக்காக ADC கட்டணம், USO நிதி (இதன் பெரும் பங்கு BSNL கொடுத்து வரும் லைசென்ஸ் கட்டணத்தின் மூலம் கிடைக்கிறது), லைசென்ஸ் கட்டணத்திலிருந்து விலக்களிப்பது, மற்றும் ஸ்பெக்ட்ரம் கட்டணத்தை தருவது உள்ளிட்ட விஷயங்கள் மூலம் தொடர்ச்சியான பொருளாதார ஆதரவினை தருவதாக கார்ப்பரேஷனாக மாறும் சமயத்தில் கொடுக்கப் பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் எனவும், BSNLஐ அதன் சீர்குலைவில் இருந்து தடுத்து காப்பாற்றுவதற்காக புதிய உறுதியான கொள்கைகளை அவசரமாக உருவாக்க வேண்டும் எனவும் மத்திய அரசாங்கத்தை எச்சரிக்க ஏகமனதாக தீர்மானிக்கிறது.

கீழ்கண்ட முக்கியமான விஷயங்களில் மத்திய அரசாங்கம் தீவிரமான, உடனடியான கவனம் செலுத்த வேண்டும் என இந்தக் கருத்தரங்கம் ஏக மனதாக ஒரே குரலில் கேட்டுக் கொள்கிறது.

அ) அரசியல் மற்றும் அதிகார வர்க்க குறுக்கீடுகள் இன்றி அதன் வியாபரம் மற்றும் தொழில் கொள்கைகளை இறுதிப் படுத்தவும், கருவிகள் வாங்குவதற்குமான சுதந்திரத்தை BSNL நிர்வாகத்திற்கு வழங்க வேண்டும். வங்கி, இன்சூரன்ஸ் உள்ளிட்ட பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசு துறைகள் தேசப் பாதுகாப்பை கருதி BSNLன் சேவைகளை பயன்படுத்த வேண்டும் என உறுதியாக உத்தரவிட வேண்டும்.

ஆ) அரசின் சமூக பொருளாதார நோக்கங்களை அமுல் படுத்துவதற்காக நாடு தழுவிய அளவில் தொலைத் தொடர்பு கட்டமைப்புகளை உருவாக்கியதற்காகவும், சலுகை விலையில் தரப்படும் நாட்டில் தொலை தூர பகுதிகளுக்கு தரப்படும் சேவைகளுக்கு ADC முறையின் மூலம் BSNL நிறுவனத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டும். சம தளப் போட்டி என்று எதார்த்தத்திற்கு புறம்பாக சொல்லப்பட்டதின் அடிப்படையில் கிராமப் புற சேவைகளில் எந்த விதமான பங்களிப்பும் தராத தனியார் நிறுவனங்களுக்கு சாதகமாக இருப்பதற்காக இந்த ADC கட்டண முறை என்பது ஒரு தலைப்பட்சமாக விலக்கிக் கொள்ளப்பட்டது.

இ) கார்ப்பரேஷன் ஆக மாற்றும் போது ஏற்றுக் கொண்டபடி BSNL நிறுவனத்திற்கு லைசென்ஸ் கட்டணத்திலிருந்து முழுமையாக விலக்கு அளிக்க வேண்டும்.

ஈ) தேசிய தொலைத் தொடர்பு கொள்கை 1999க்கு புறம்பாக BSNL நிறுவனத்திடமிருந்து கட்டாயமாக பெறப்பட்ட 3G மற்றும் BWA லைசென்ஸ் கட்டணமான 18500 கோடி ரூபாய்களை உடனடியாக திரும்ப தர வேண்டும். வணிக ரீதியான தேவைகள் அதிகமுள்ள மாநிலங்களை தேர்ந்தெடுக்கும் சட்ட பூர்வமான உரிமையினை மறுத்த DOT யின் நியாயமற்ற, ஒருதலைப் பட்சமான அதிகார வர்க்கத்தின் பாரபட்ச போக்கு மிக வன்மையாக கண்டிக்கத் தக்கது.

உ) BSNLன் வளர்ச்சியின் மீது பாதகமான விளைவை ஏற்படுத்துகின்ற மிக முக்கிய பிரச்சனையான ITS அதிகாரிகளை BSNLல் இணைக்கும் பிரச்சனைய உடனடியாக உறுதியாக முடிவு கட்ட வேண்டும். 01.01.2007 முதல் 78.8 சதவிகித பஞ்சப்படி இணைப்பு தொடர்பாக DPEன் உத்தரவுகளை உடனடியாக அமுலாக்கி BSNLல் இணையாத ITS அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் காட்டப்பட்டுள்ள பாரபட்சத்தை களைய வேண்டும்.

ஊ) கார்ப்பரேஷன் ஆகும் சமயத்தில் அரசாங்கம் கொடுத்த உறுதிமொழியை காப்பாற்றி, அரசின் தொகுப்பு நிதியிலிருந்து ஓய்வூதியத்தை உயர்த்தி தரும்படியாக விதி எண் 37 Aல் பொருத்தமான திருத்தங்களை கொண்டு வந்து ஓய்வூதியத்தை உயர்த்தி உடனடியாக வழங்க வேண்டும். விதி எண் 37Aல் உள்ள ஓட்டைகளை அடைத்து மத்திய அரசு விதிகளின் அடிப்படையில் DOTயில் பணி நியமனம் செய்யப்பட்ட BSNL ஓய்வூதிய தாரருக்கு ஓய்வூதியத்தை உடனடியாக வழங்க வேண்டும்.

எ) பங்கு விற்பனை மற்றும் விருப்ப ஓய்வு திட்டம் ஆகியவற்றை பரிந்துரைத்த பிட்ரோடா கமிட்டியின் மோசமான பரிந்துரைகளை ரத்து செய்ய வேண்டும்.

**ஊழியர்களின் உறுதியான எதிர்ப்பை பதிவு செய்ய 2010 அக்டோபர் 19 முதல் 21 வரை மூன்று நாட்கள் தேசம் தழுவிய வேலை நிறுத்தம் செய்திட இந்த கருத்தரங்கம் ஏகமனதாக முடிவு செய்கிறது. நியாயமான காலவரைக்குள் அரசாங்கம் இந்த பிரச்சனைகளை தீர்க்க வில்லையெனில் கால வரையற்ற நேரடி நடவடிக்கைகளில் இறங்குவதற்கான முடிவை மேற்கொள்ள கூட்டு நடவடிக்கைக் குழுவிற்கு முழு அதிகாரத்தையும் இந்த கருத்தரங்கம் ஏக மனதாக வழங்குகிறது.**

**********************************